# Issue 45

✦ கிறிஸ்து உனக்காக மரித்தாரா ?
✦ நற்செய்தியின் வளர்ச்சி
✦ இயேசு முரண்பாடுகள்
✦ வினாவிடை
✦ வாசித்துச் சிந்தித்தல்

## கிறிஸ்டடெல்ஃபியர்கள் யார் ?

கி றி ஸ் ட டெ ல் ஃ பி ய ன் ஸ் (Christadelphians) என்ற பதம் கிரேக்க மூலமொழிகளாகிய Christ மற்றும் adelphos என்ற பதங்களிலிருந்து உருவானது. இதன் அர்த்தம் "கிறிஸ்துவில் சகோதரர்" என்பதாகும். கிறிஸ்டடெல்ஃபியன்ஸ் என்ற உலகளாவிய கிறிஸ்தவ சமுதாயம் 'வேதாகமத்தில் முழுமையாக நம்பிக்கை வைக்கிற' மக்கள் கூட்டமாகும். வேதவாக்கியங்களெல்லாம் தேவனால் அருளப்பட்டவை என்று உறுதியாக நம்புகிறார்கள்.

நாங்கள், தேவனுடைய (ஒரே பேறான) குமாரனாகிய இயேசு கிறிஸ்து வல்லமையோடு பூமிக்குத் திரும்பி வருவார் என்றும், அவர் வருத்தங்கள், அக்கிரமம், ஆக்கிரமிப்புகளை நீக்கி, தமது ஜனங்களுக்கு நியாயத்தையும், சமாதானத்தையும், நீதியையும் கொண்டு வருவார் என்றும் நம்புகிறோம்.

நாம் மரித்தாலும், மரித்தோரிலிருந்து எழும்பி, நியாயந்தீர்க்கப்படுவோம் என்று நம்புகிறோம். அத்துடன், இப்போது வாழும் வாழ்க்கையில் தன்னயமும் பொல்லாங்கும் நிறைந்து வாழ்ந்தவர்கள் நித்தியத்தில் வாழமுடியாமல் அழிக்கப்படுவார்கள். அதற்கு மாறாக, தேவனுடைய வார்த்தையை நம்பி கீழ்ப்படிந்து ஜீவித்தவர்கள் நித்தியமாக ஜீவித்திருப்பார்கள். மேலும் ஒவ்வொருவரின் வாழ்விலும் இரண்டு முக்கியமானவைகளை நிறைவேற்றியே ஆக வேண்டும் என்று விசுவாசிக்கிறோம். அவைகள் (1) தேவனிடம் முழு இருதயத்துடன் அன்பு கூர வேண்டும். (2) உன்னைப் போல பிறரை நேசிக்க வேண்டும்.

ஒருங்கிணைப்பாளர் : லினஸ் டேனியேல்
**e-mail: linus.daniel@hotmail.com**
http://tamil.icdelph.org/
வேதத்தின் சத்தியத்தை கேளுங்கள்
http// www.choose2live.info/new_creation
இந்தியாவில் இலவச பிரதிக்குத் தொடர்பு முகவரி :
The Christadelphians,
P.O. Box 4237, Bangalore 560-042
India
ஸ்ரீலங்காவில் இலவச பிரதிக்குத் தொடர்பு முகவரி :
**The Christadelphians,**
The Christadelphians,
P.O. Box 60, Negombo - 11500,
SRI LANKA.
Email: slcbm2@sltnet.lk

### புது சிருஷ்டி பதிப்பாளர் குழு

**லினஸ் டேனியேல் : தலைமை ஒருங்கிணைப்பாளர்**

**திருமதி கிலாடிஸ் சுகிர்தராஜ் தமிழ் மொழிபெயர்ப்பு உதவிகளுக்காக சிறப்பான நன்றி கூறுகிறோம்.**

இந்த பத்திரிகையின் வாயிலாக, வேதவாக்கியங்களை வாசிக்க உங்களைத் தூண்டுவதே எங்கள் குறிக்கோள். இதிலுள்ள கட்டுரைகள் உங்கள் ஆவிக்குரிய வாழ்க்கையில் வளர உற்சாகப்படுத்தும் என நம்புகிறோம். நம்மை இரட்சிப்புக் கேற்ற ஞானமடையச் செய்வதால் வேதாகமத்தைத் தினமும் வாசிக்க உங்களை உற்சாகப்படுத்துகிறோம்.

இந்த பத்திரிகையில் காணப்படும் எல்லா கட்டுரைகளும் அனைத்துலக கிறிஸ்டடெல்ஃபிய வழிமுறை யிலிருந்து தெரிந்தெடுத்து மொழி பெயர்ப்புச் செய்து பிரசுரமாகியுள்ளன.

*"இப்படியிருக்க, ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால், புது சிருஷ்டியாயிருக்கிறான். பழையவைகள் ஒழிந்துபோயின, எல்லாம் புதிதாயின" (2. கொரிந்தியர் 5:17).*



# கிறிஸ்து உனக்காக மரித்தாரா ?

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மரணத்தைப் பற்றி ஐந்து முக்கிய போதனைகளுடன் கூடிய சில வேதவாக்கியங்கள் இங்கே கொடுக்கப்பட்டுள்ளன.

1. எல்லாம் வல்ல தேவன் தம் ஒரே பேறான குமாரனாகிய இயேசு கிறிஸ்துவை, முழு உலகத்தின் பாவங்களுக்காக மரிப்பதற்காகத் தந்தார் என்பதை வேதாகமம் தெளிவாகக் கூறுகிறது. யோவான் ஸ்நானகன் அவரைப் பற்றி "உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கும் தேவ ஆட்டுக்குட்டி" என அறிவித்தான். (யோவான் 1:29).

2. நாம் இப்பொழுதிருக்கிற இயற்கை நிலையில், நம் பாவங்களுக்கான சரியான சம்பளமாக நாமெல்லாரும் மரணத்தைச் சுதந்தரிக்கிறோம். (ரோமர் 6:23).

3. அனைத்து செயல்களின் முடிவு மரணம். (சங்கீதம் (146:4) சங். 6:5)

4. ஆனால் தேவன் முழுவதும் இரக்கமே உருவானவர். நம்மில் யாரும் மரிப்பது அவருக்குப் பிரியமில்லை. (எசேக்கியேல் 18:32).

5. அவருடைய நேசகுமாரனின் தியாகத்தின் மூலம் தேவன் நம்மை நீதிமான்கள் போல் நடத்தும் அற்புதமும் இலவசமுமான ஈவை நமக்கு அருளுகிறார். (ரோமர் 5:18)

இவை எல்லாவற்றின் பொருள் - அதிலும் குறிப்பாக "பாவம் நீக்கப்படுதல்" என்றால் நாமனைவரும் என்றென்றுமே வாழத் தகுதியானவர்கள் என அர்த்தமாகிறது என இப்பொழுது ஆராய்வோம்.

## விசுவாசம்

மிக அதிகமாக எல்லோருக்கும் தெரிந்த வேத வசனம் "தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப் போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார்". (யோவான் 3:16). இதைச் சரியாக வாசித்தால் இயேசு உலகத்தில் வந்ததால் மரணத்தினின்று காக்கப்படுவதற்கும் அதிகமான நன்மை இருக்கிறது என்பது விளங்கும்.

இரட்சிக்கப்படுவதற்கு ஒரு மனிதன் அவரில் நம்பிக்கை (விசுவாசம்) வைக்க வேண்டும். ஆண்டவரே இவ்விதம் கூறியிருக்கிறார். "என் வசனத்தை கேட்டு, என்னை அனுப்பினவரை விசுவாசிக்கிறவனுக்கு நித்திய ஜீவன் உண்டு" (யோவான் 5:24) இன்னொரு இடத்தில் ''விசுவாசிக்கிறவன் எவனும் அவைகளினின்று இவராலே (கிறிஸ்து) விடுதலையாகி நீதிமானாக்கப்படுகிறான்"

(அப். 13:39).

ஆகவே மரணத்தினின்று நாம் தப்பிக்கத் தேவைப்படுவது நம்பிக்கை அல்லது விசுவாசம். ஏனென்றால் ''விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாத காரியம். ஏனென்றால் தேவனிடத்தில் சேருகிறவன் அவர் உண்டென்றும், அவர் தம்மைத் தேடுகிறவர்களுக்குப் பலன் அளிக்கிறவரென்றும் விசுவாசிக்க வேண்டும்" (எபிரேயர் 11:6).

நமக்கு விசுவாசம் இருந்தால் மட்டுமே தேவனைப் பிரியப்படுத்த முடியும்.

## கீழ்ப்படிதல்

கர்த்தராகிய இயேசு ஒரு மாபெரும் ஆசிரியர். அவர் கூறுவதைக் கேட்பதோடு விட்டு விடாமல் அதற்கும் அதிகமானதை மக்களிடம் அவர் எதிர்பார்த்தார். நித்திய ஜீவனை ஈவாக அளிக்கும் அவர், "ஒருவன் என் வார்த்தையைக் கைக்கொண்டால், அவன் என்றென்றைக்கும் மரணத்தைக் காண்பதில்லை." என்றார். யோவான் 8:51.

இன்னொரு இடத்தில், "தேவனுடைய வார்த்தையைக் கேட்டு அதைக் காத்துக் கொள்ளுகிறவர்களே அதிக பாக்கியவான்கள்" என்றார். (லூக்கா 11:28).

ஆகவே கிறிஸ்துவை விசுவாசிக்கிறதற்கும் அதிகமாக ஒன்றிருக்கிறது. இயேசு கட்டளையிட்டதன்படி நாம் செய்யவும் வேண்டும்.

அவரது தியாக பலியினாலே தேவனுடைய குமாரன், "தமக்குக் கீழ்ப்படிகிற யாவரும் நித்திய இரட்சிப்பை அடைவதற்குக் காரணரானார்." (எபிரேயர் 5:9). அவருடைய போதனையின் ஆரம்பத்திலிருந்து அவர் சொல்லி வருவது இதைத்தான் : மனந்திரும்பி சுரிசேஷத்தை விசுவாசியுங்கள்" (மாற்கு 1:15). மனந்திரும்புவது என்றால், நம் பாவங்களினின்று விலகி, நம் வாழ்க்கை முறையை மாற்றிக் கொள்ள முயல்வது.

நம்மைப் படைத்தவர், நாம் மரித்துப்போவதை விரும்புவதில்லை. "ஒருவரும் கெட்டுப்போகாமல் எல்லோரும் மனந்திரும்ப வேண்டுமென்று விரும்பி" (2 பேதுரு 3:9). ஆம், நமக்கு முன் இருக்கும் மிக முக்கியமான தெரிந்து கொள்ளுதலும் அதுதான் : மனந்திரும்புதல் அல்லது நித்திய நித்தியமான மரணம். ஏனெனில் 'கெட்டுப்போவது' என்றால் - என்றென்றுமாய் உயிரற்று, வாழாமல் இருப்பது ஒரு சமயம் ஆண்டவர் இயேசு, ஒரு கோபுரம் இடிந்து விழுந்ததால், மரித்த சில பரிதாபமான மக்களைப் பற்றிப் பேசும்போது, "நீங்கள் மனந்திரும்பாமற்போனால் எல்லாரும் அப்படியே கெட்டுப்போவீர்கள்" (லூக்கா 13:3) என்று கூறினார். கிறிஸ்துவின் மரணத்தினாலே, நம் பாவங்களிலிருந்து இரட்சிக்கப்பட்ட, நம்



இருதயம் மாற்றப்படுவதோடு, நம் தன்னலமான வழிகளையும் விட்டுவிடவேண்டும். ''சோர்ந்து போகாமல் நற்கிரியைகளை செய்து, மகிமையையும், கனத்தையும், அழியாமையையும் தேடுகிறவர்களுக்கு நித்திய ஜீவனை அளிப்பதாக" வாக்களித்திருக்கிறார். (ரோமர் 2:7).

## இயேசுவைப் பின்பற்றுதல்

இயேசுவின் செய்தியைப் பொதுவாக ஒதுக்கித் தள்ளிய பரிசேயரிடம் பேசும்போது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து, உங்களுக்கு ஜீவன் உண்டாகும்படி என்னிடத்தில் வர உங்களுக்கு மனதில்லை." என்றார். (யோவான் 5:40). ஆண்டவரைப் பின்பற்றுவதென்பது செயலாக்கம் நிறைந்தது. நம் இயற்கை சுபாவத்தை வெறுக்க முற்றிலுமாய் ஒப்புக்கொடுத்து, அவருடைய சீஷர்களாய் அனுதினமும் சிலுவையைச் சுமப்பது (மத்தேயு 16:24 பார்க்கவும்).

அவருடைய சீஷர்கள் ஒரு சமயம், "ஆண்டவரே, இரட்சிக்கப் படுகிறவர்கள் சிலபேர் தானோ?" எனக் கேட்டபொழுது, அவர் 'ஆம்' என்ற அர்த்தத்தில் தான் பதிலளித்தார். ''இடுக்கமான வாசல் வழியாய் உட்பிரவேசிக்கப் பிரயாசப்படுங்கள், அநேகர் உட்பிரவேசிக்க வகை தேடினாலும் அவர்களாலே கூடாமற்போகும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்" (லூக்கா 13:23,24)

இரட்சகர் பிரசங்கித்த ஒவ்வொன்றும், அவர் வாழ்ந்த விதத்தின் முன் மாதிரி, சுகமளித்த அற்புதச் செயல்கள், மரித்தவர்களையும் கூட உயிரோடெழுப்பியது ஆகிய இவையெல்லாமே மனித குலத்தின் மேல் தேவன் கொண்டுள்ள அன்பைக் காண்பிக்கிறது. மனித ஆளுகையின் கீழ் இருப்பதைவிட தேவனுடைய இராஜ்யத்தில் இருக்கும் விதம் வித்தியாசமானது எனக் காண்பித்தார்.



## கிறிஸ்து நமக்குள்

''குமாரனை உடையவன் ஜீவனை உடையவன், தேவனுடைய குமாரன் இல்லாதவன் ஜீவன் இல்லாதவன்" என்று அப்போஸ்தலனாகிய யோவான் கூறுகிறார். (1யோவான் 5:12). ஆனால் ''கிறிஸ்துவை உடையவனாயிருப்பது என்றால் என்ன பொருள்? அதாவது கிறிஸ்துவின் ஜீவியத்தை நம்மில் வளர்த்துக்கொள்வது அல்லது அவரோடு சிந்தையில் ஒருமனப்பட்டிருப்பது. நாம் அவரைப்

போலாகும் இந்தத் தொடர் முயற்சியைப் பல்வேறு பதங்கள் சித்தரிக்கின்றன." (எடுத்துக்காட்டாக ரோமர் 8:9,11) ஆனால் ஒவ்வொரு விசுவாசியின் வாழ்க்கையிலும் நடந்தேற வேண்டிய ஒரு முக்கியமான ஜீவனுள்ள முன்னேற்றம் அல்லது வளர்ச்சி அவரைப் போலாவது ஆகும்.

அனுதினமும் கிறிஸ்துவுடன் நம்மை இணைத்துக் கொள்ளும் இந்த நம்பிக்கையை - விசுவாசியினுள் கிறிஸ்துவின் ஜீவன் "கிறிஸ்துவானவர் மகிமையின் நம்பிக்கையாக உங்களுக்குள் இருப்பதே அந்த இரகசியம்" (கொலொசேயர் 1:27) என்று பவுல்டியார் விவரிக்கிறார். மேலும் நாம் கிறிஸ்துவுடையவர்களானால், நாம் அவருக்குச் சொந்தமானவர்களெனில், அவர் வருகையின் போது நாம் உயிரோடெழுப்பப்படுவோம். (1கொரிந்தியர் 15:22,23) மரண நித்திரையாக நாம் நித்திரையடைந்தாலும், இயேசு பூமிக்குத் திரும்ப வருமுன் நாம் மரித்தால், ஜீவனக்கென எழுப்பப்படுவோம். நாம் அவர் வார்த்தையைக் கைக்கொண்டால் நாம் மரணத்தைக் காண்பதில்லை என நம் ஆண்டவர் கூறியதன் பொருள் இதுதான். (யோவான் 8:51)

## அவருக்குள் ஞானஸ்நானம் பண்ணப்படுதல்

ஆனால், முதலில் கர்த்தருடைய தியாகபலியில் நம்மை இணைத்துக் கொள்வதற்கு அடையாளமாக, அவரோடு கூட மரிக்க வேண்டும். கிறிஸ்து இயேசுவுக்குள் ஞானஸ்நானம் பண்ணப்படுவது என்றால், அவரின் மரணத்திற்குள் ஞானஸ்நானம் பண்ணப்படுவதாகும் (ரோமர் 6:3). நாம் அவரோடுகூட நாம் மரித்தோமானால் அவருடனே கூடப் பிழைத்தும் இருப்போம் (வசனம் 8) ஞானஸ்நானம் நீரில் மூழ்கி எடுக்கவேண்டும். அது நீரில் அடக்கம் பண்ணப்படும் அடையாளமாகும். ரோமர் நிருபத்தில் அதே அதிகாரத்தில், "நமக்கு ஒப்புவிக்கப்பட்ட உபதேச சட்டத்திற்கு நாம் மனப்பூர்வமாய்க் கீழ்ப்படிய வேண்டும்" சொல்லப்பட்டுள்ளது. பாவத்தினின்று விடுதலையாக்கப்பட்டு, நீதிக்கென்று தேவனுக்கு அடிமைகளாகவேண்டும். இதுவே, "பாவமன்னிப்புப்புக்கென்று மனந்திரும்புதலுக்கேற்ற ஞானஸ்நானம்". இதை ஆதாரமாகக் கொண்டே நம் இரட்சகரின் பிரசங்கம் இருந்தது. (மாற்கு 1:4) (லூக்கா 3:3; 5:32) இயேசு தானும் ஞானஸ்நானம் பண்ணப்பட அனுமதித்தார். "இப்படி எல்லா நீதியையும் நிறைவேற்றுவது நமக்கு ஏற்றதாயிருக்கிறது." (மத்தேயு 3:15) என அதற்கான விளக்கமும் கொடுத்தார். ஒருவன் ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டான் எனப் போதித்தார். (யோவான் 3:3-5).

## அவரில் ஜீவிப்பது

நமது பாதையில் நாம் கால் வைத்த பின்னும் நாம் நமது பழைய தன்னலமான



பழக்கங்களில் தொடர்ந்து இருக்கக்கூடாது. ஏற்கனவே நாம் கண்டபடி, விசுவாசிப்பது மட்டும் போதாது.

தேவன் நம்மிடத்தில் என்ன எதிர்பார்க்கிறார் என்பதைத் தெரிந்து கொள்ள நாம் வேதாகமத்தை வாசிக்கும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். "இரட்சிப்புக்கேற்ற ஞானமுள்ளவனாக்கத்தக்க பரிசுத்த வேத எழுத்துக்கள்" (2தீமோ 3:15).

அவரைப் பின்பற்றுவோரில் கிறிஸ்து "உருவாவதைப் பற்றிப் பவுல் அப்போஸ்தலன் கூறுகிறார்." (கலா. 4:19) தேவனுடைய பரிசுத்த வேதவார்த்தை நம்மீது கொண்டுவரும் விளைவு இதுதான் (ரோமர் 12:2ஐப் பார்க்கவும்).

வழிநடத்துதலுக்காக நாம் நம் பிதாவிடம் தொடர்ந்து ஜெபித்துக் கொண்டேயிருக்கவேண்டும். (சங்கீதம் 25:4,5) எப்போதும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் கேட்டுக் கொள்ளவேண்டும். (யோவான் 16:23)

நாம் புதிதாக ஒப்புக்கொடுத்திருந்தாலும், பாவம் செய்தால் மனந்திரும்புவது தொடர்ந்து நடைபெறவேண்டும். கர்த்தருடைய ஜெபம் நமக்குப் போதிப்பது போல நாம் அடிக்கடி மன்னிப்பை நாடவேண்டும். மத்தேயு 6:12).

சீஷர்களாக நாம் ஒன்றாகக் கூடவேண்டும் (எபி 10:25). கிறிஸ்துவின் கட்டளைக்குக் கீழ்ப்படிந்து அப்பம் பிட்க வேண்டும். (அப்போஸ்தலர் 2:46).

நாம் என்னதான் விசுவாச வாழ்க்கை வாழ முயன்றாலும், இராஜ்யத்தில் நமககொரு இடத்தைச் சம்பாதிக்க முடியாது. நித்திய ஜீவன் தேவனுடைய கிருபையினாலே மட்டும் வருகிறது. (தகுதியற்றோருக்கு தயவு)

## இயேசுவின் நண்பர்கள்

முழு உலகத்தின் பாவங்களைப் போக்கவே கர்த்தராகிய இயேசு கிறிஸ்து அனுப்பப்பட்டிருந்தாலும், இரட்சிப்பு எனும் அவருடைய ஈவினால் நாம் பலனடைய வேண்டுமெனில், நாமெல்லாரும் அவருடைய தியாகபலியில் நம்மை இணைத்துக் கொள்ளவேண்டும். இயேசு தம் நண்பர்களுக்காகத் தம் உயிரைக் கொடுத்தார். அவருடைய நண்பர்கள் யாரெனில் "அவர் கற்பித்த யாவையும் செய்பவர்களே" (யோவான் 15:13,14). அவர் நம்மை நியாயந்தீர்க்கத் திரும்பவரும்போது, (ரோமர்) 2:16) "தேவனை அறியாதவர்களுக்கும், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியாதவர்களுக்கும் நீதியுள்ள ஆக்கினையைச் செலுத்துவார்" (2தெச 1:8).

ஞானஸ்நானம் ஒரு ஆயுட்காலம் முழுவதற்குமான சீஷத்துவத்தின் ஆரம்பம் மட்டுமே. இதில் நம்முடைய அர்ப்பணிப்பு நம் பங்குக்கு அடங்கியுள்ளது. ஆனால் சொல்லி முடியாத பலன்களை இவ்வுலக வாழ்க்கையிலும் இனிவரும் யுகத்திலும்

கொண்டுவரும். அப்போஸ்தலனாகிய பவுல் அதைச் சுருக்கி இவ்விதம் விவரிக்கிறார்.

“நம்முடைய இரட்சகராகிய தேவனுடைய தயையும் மனுஷர் மேலுள்ள அன்பும் பிரசன்னமான போது, நாம் செய்த நீதியின், கிரியைகளினிமித்தம் அவர் நம்மை இரட்சியாமல், தமது இரக்கத்தின்படியே, மறுஜென்ம முழுக்கினாலும், பரிசுத்த ஆவியினுடைய புதிதாக்குதலினாலும், நம்மை இரட்சித்தார். தமது கிருபையினாலே நாம் நீதிமான்களாக்கப்பட்டு, நித்திய ஜீவனுண்டாகும் என்கிற நம்பிக்கையின்படி சுதந்தரராகத் தக்கதாக அந்தப் பரிசுத்த ஆவியை நம்மேல் சம்பூரணமாய்ப் பொழிந்தருளினார்.” (தீத்ᵘ 3:4-7)

**லிஸ் ராபின்சன்**

# நற்செய்தியின் வளர்ச்சி

## எருசலேமுக்கு அப்பாலும் நற்செய்தி (சுவிசேஷம்) பரவுகிறது

எருசலேமில் ஸ்தேவான் கொடூரமான முறையில் கொலையுண்டது - தேவனை தூஷித்ததாக நியாயம் விசாரித்துக் கல்லெறிந்ததால் மரணம் - நற்செய்தி பரவுவதில் புதிய வளர்ச்சிக்கு இது ஆரம்பம். அவன் முதல் இரத்தசாட்சி என்றாலும், நசரேயனாகிய இயேசுவின் மேல் விசுவாசம் வைத்ததற்காக இன்னும் அநேகர் உயிரிழக்கலாம். திடீரென எருசலேம் வசிப்பதற்கு உகந்ததல்லாத அபாயகரமான இடமாக ஆயிற்று. அதை விட்டு வேறிடம் செல்வதே சிறந்ததென்றாயிற்று. என ஜான் ஹெல்லாவெல் விளக்குகிறார்.

### உபத்திரவமும் சிதறுண்டு போதலும்

எருசலேமிலுள்ள சபையினருக்கு ஒருங்கிணைந்த உபத்திரவம் காத்திருக்கிறதைக் காட்டும் ஒன்றாக ஸ்தேவானின் கொலை அமைந்தது. ஸ்தேவான் மேல் கல்லெறிந்தவர்களின் ஆடைகளுக்குக் காவலிருந்த சவுல், கர்த்தராகிய இயேசுவை விசுவாசித்தவர்களைக் கைது செய்யவும் சிறையிலடைக்கவும் காரணமாயிருந்தான். அவனது நோக்கமெல்லாம் புதிய விசுவாசத்தின் வளர்ச்சியை அடக்கவேண்டும் என்பதோடு, முடிந்தால் அதை முற்றிலுமாக அழித்து விடவேண்டும் என்பதே.

இருப்பினும், இதன் விளைவு முற்றிலும் மாறுபட்ட ஒன்றாக இருந்தது. இந்த உபத்திரவத்தினால், எருசலேமில் மீதி இருந்த விசுவாசிகள் எருசலேமிலிருந்து வெளியேறி யூதேயா மற்றும் சமாரியாவில் (8:1) குடியேறினார்கள். அதாவது நாடு முழுவதும் பரவிப் போனார்கள். இந்த நடவடிக்கை கர்த்தரின் முந்தைய கட்டளையை (மத்தேயு 10:23) நிறைவேற்றுவதாகியது. அப்போஸ்தலர்கள் மட்டும்



எருசலேமில் தங்கியிருந்தனர். உபத்திரவமும் அதன்பின் விசுவாசிகள் சிதறிப்போனதும் சுவிசேஷம் மேலும் பரவுவதற்கு ஏதுவாயிற்று.

விதவைகளைக் கவனிக்கும் பணியில் ஈடுபட்ட பிலிப்புவை (6:5) ஏற்கனவே சந்தித்துள்ளோம். அவனோடு இருந்த ஸ்தேவானைப்போல், அவன் “பந்தி விசாரிப்பு” மட்டும் செய்யவில்லை. உற்சாகமான பிரசங்கியாகவும் இருந்தான். அவன் சமாரியாவுக்குச் சென்றானென்றால், சுவிசேஷ செய்தி ஆண்டவர் இயேசு கிணற்றண்டையில் சந்தித்த பெண் இருந்த இடத்திற்கும் வந்தது என்று பொருள். (யோவான் 4:19-42). ஏற்கனவே ஒருமுறை போயிருந்த பிலிப்புவுக்குத் தன் ஊழியத்தைத் துவங்க சமாரியா ஏற்ற இடமாகத் தெரிந்தது. பிலிப்புவின் பிரசங்கத்திற்குத் திரளான ஜனங்கள் இணங்கிக் கொடுத்தார்கள். அநேக அற்புதங்களும் செய்யப்பட்டன. மனநலம் குன்றியவர்கள், திமிர்வாதக்காரர்கள், சப்பாணிகள் போன்றோரும் நலம் பெற்றார்கள். “அந்தப் பட்டணத்தில் மிகுந்த சந்தோஷம் உண்டாயிற்று”.

### மாயவித்தைக்காரனான சீமோன்

அந்தப் பட்டணத்தில் பிலிப்புவிற்குப் போட்டியாக ஒருவன் இருந்தான். சீமோன் எனும் பேர்கொண்ட ஒரு மனிதன் தன் மாயவித்தையினால் மக்களை பிரமிக்கப்பண்ணிக் கொண்டிருந்தான். அவன் ஒரு மந்திரவாதியின் கலைகளைப் பயன்படுத்தித் தனக்கு இயற்கைக்கப்பாற்பட்ட சக்தி இருப்பதாகக் கூறினதுமல்லாமல் குறிசொல்லுதல் போன்ற சில செயல்களால் தான் வாழ வழி செய்து கொண்டான். பிலிப்பு செய்த அடையாளங்களையும் அற்புதங்களையும் சீமோன் கண்டபோது, தன்னுடைய முயற்சிகள் போலி என்றும், பிலிப்புவினுடையவை உண்மையானவை எனவும் கண்டு கொண்டான்.



அவன் பிலிப்புவை எதிர்ப்பான் என எதிர்பார்த்திருக்கலாம். ஆனால் அவன் பிலிப்பு தன்னைக் காட்டிலும் உயர்ந்தவன் என்று உணர்ந்தான். புதிய ஏற்பாட்டில் எழுதப்பட்டுள்ள மற்றவர்களைப் போலவே இவனும் இரட்சிக்கப்பட்டான். அவன் கண்டு கொண்ட புதிய ஜீவ மார்க்கத்தை ஏற்றுக்கொண்டதற்கு அடையாளமாக ஞானஸ்நானம் பெற்றான். சீமோன் பிலிப்புவுடன் தொடர்ந்து இருந்தான். அவனது அர்ப்பணிப்பு உண்மையானது என்று நாம் எண்ணுமளவிற்கு இருந்தாலும், அவன் ஆவியில் முதிர்ச்சியடையாதவனாகவே இருந்தான் என்பது சீக்கிரத்தில் வெளியாயிற்று.

### யோவான் சமாரியாவுக்குச் செல்லுதல்

பிலிப்புவின் வெற்றிகரமான பலன்தரும் பிரசங்கம் பற்றிய செய்தி எருசலேமிலிருந்த அப்போஸ்தலர்களின் செவியை எட்டியது. கடந்த காலத்தில் யூதர்களும் சமாரியரும் ஒருவரையொருவர் பகைத்துக்கொண்டிருந்தனர். (யோவான் 4:9) ஆனால் இப்பொழுது, சுவிசேஷம் ஆண், பெண் அனைவருக்கும் வந்தது (மாற்கு 16:15). இது ஒரு குறிப்பிடத்தக்க முன்னேற்றமாயிருந்ததால், மூத்த அப்போஸ்தலர்களான பேதுருவும் யோவானும், பிலிப்புவின் சாதனைகளுக்கு அங்கீகாரமும் ஆதரவும் அளிக்கவும் புதிய விசுவாசிகளை சந்திக்கவும் வேண்டுமென முடிவு செய்யப்பட்டது. சமாரிய சீஷர்கள் பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொள்ள ஜெபிக்கவேண்டும் என்று விரும்பினர்.

பரிசுத்த ஆவியானவரின் வரங்கள், ஒருவன் ஞானஸ்நானம் எடுத்தவுடனே தானாகவே அவன்மேல் வருவதில்லை. பிலிப்புவும் மற்றவர்களுக்கு அந்த வரங்களைக் கொடுக்க முடியாது. அப்போஸ்தலர்கள் மட்டுமே "கைகளை தலைமேல் வைத்து" ஜெபிப்பதன் மூலம் ஆவியின் வரங்களை கடத்தத் தக்கவர்கள் என முடிவு செய்யலாம்.

அப்போஸ்தலர்கள் வரங்களை அருளும் சக்தி பெற்றவர்கள் என்பதில் வியந்துபோன சீமோன், தானும் அவ்வாறே செய்ய சக்தி வேண்டுமென்பதற்காகப் பணம் கொடுக்க முன்வந்தான். அதன் வியாபார மதிப்பு அதிகமாயிருக்கும், அவன் தன்னை ஒரு "மாபெரும் மனிதன்" என்று சொல்லிக் கொள்ளலாம். முன்பு தன்னைப் பறைசாற்றிக்கொண்ட படியே "பெரிதான சக்தி" என்று சொல்லிக் கொண்டு முன்பை விட அதிக பிரபலமாகலாம்.

பேதுரு சீமோனைப் பலமாகக் கடிந்துகொண்டான். தேவனுடைய வரத்தைப் பணத்தாலே பெற்றுக் கொள்ளலாம் என்று அவன் எப்படி நினைக்கலாம். அவன் இருதயம் செம்மையானதாக இல்லை. அவனது மனப்பான்மையினால் வரும் பயங்கரமான விளைவுகளைப் பேதுரு வரிசையாக அடுக்கினான். அவைகள் எழுத்திலே எழுதப்படவில்லை. ஆனால் பேதுரு சொன்ன காரியங்களில் ஒன்றும் நேரிடாதபடிக்குத் தனக்காக வேண்டிக்கொள்ளும்படி சீமோன் கேட்டுக் கொண்டான்.

பிலிப்புவின் ஊழியத்தினை அப்போஸ்தலர் அங்கீகரித்துக் கொண்டார்கள். அவர்கள் எருசலேமுக்குப் போகும் வழியில் கிடைத்த சந்தர்ப்பங்களைப் பயன்படுத்தி, சமாரிய கிராமங்களில் பிரசங்கித்தார்கள்.

### பிலிப்பு ஒரு எத்தியோப்பியனை மனம்மாறச்செய்தல்

எருசலேமிலிருந்து தெற்கு நோக்கிச் செல்லும் பாதையில் போய்க் கொண்டிருந்த வழிப்போக்கன் ஒருவனை இடைமறிக்கும் ஒரு புதுப் பணி





பிலிப்புவுக்குக் கொடுக்கப்பட்டது. இவன் எருசலேமுக்குப் போய்விட்டு, எத்தியோப்பியாவிலுள்ள கந்தாகே எனும் ராணியின் கொலுமண்டபத்திற்குத் திரும்பிக் கொண்டிருந்த எத்தியோப்பியன். அங்கே அவன் நிதி மந்திரியாக இருந்தான்.

அவன் ஒரு "அண்ணகன்" எனக்கூறப்பட்டுள்ளது. இதை வார்த்தையின்படி பொருள் கொள்ள அவசியமில்லை. ஏனெனில் கிழக்கத்திய அரசவைகளில் உயரதிகாரிகளைக் குறிக்கும் சொல்லாக இவ்வார்த்தை பயன்பட்டது. சில சமயங்களில் இந்த வார்த்தை "மந்திரி" என்றும் மொழிபெயர்த்திருக்கின்றனர். சிலர் நம்புகிறபடி, அவன் தேவாலயத்தில் தொழுது கொள்வதற்காக எருசலேம் சென்றிருந்தானென்றால் உபாகமம் 23:1ன்படி அவன் அண்ணகனாயிருந்திருக்க முடியாது.

இந்த எத்தியோப்பியன் தன் ரதத்தில் அமர்ந்தவாறு பழைய ஏற்பாட்டிலுள்ள ஏசாயா சுருளை சத்தமாக வாசித்துக் கொண்டிருந்தான். சத்தமாக வாசிப்பது பழங்காலப் பழக்கம். இங்கே அவன் தன்னோடு வந்த பணியாட்களின் நன்மைக்காகவும் சத்தமாக வாசித்திருக்கலாம். எருசலேமுக்குப் போன இடத்தில் இந்த சுருளை வாங்கியிருக்கலாம். இவன் ஒரு யூதன் அல்லது மதம் மாறியவன் என்ற கருத்தும் உண்டு.

### முன்மாதிரியான தாழ்மை

பிலிப்பு எத்தியோப்பியனிடம் செல்லும்படி பரிசுத்த ஆவியானவர் கட்டளையிட்டார். ரதத்தோடு சேர்ந்து ஓடியவாறே, அவன் வாசித்துக் கொண்டிருப்பது புரிகிறதா எனக் கேட்டான். மூல மொழியில், "நீ வாசித்துக் கொண்டிருப்பது உனக்கு விளங்கவில்லை, இல்லையா ?" என்றிருக்கிறது.

உயர்ந்த அந்தஸ்திலிருக்கும் இந்த எத்தியோப்பியனின் தாழ்மை சிறந்த

முன்மாதிரியாயிருக்கிறது. “உன் வேலையைப் பார்த்துக்கொண்டு போ” என அவன் பிலிப்புவிடம் கூறாமல், உதவியை உடனே ஏற்றுக்கொண்டு, பிலிப்புவைத் தன்னோடு ரதத்தில் அமர்ந்துகொள்ளும்படி அழைத்தான்.

அவன் ஏசாயா 53ன் ஒரு பகுதியை வாசித்துக் கொண்டிருந்தான்.

“அவன் நெருக்கப்பட்டும் ஒடுக்கப்பட்டும் இருந்தார், ஆனாலும் தம்முடைய வாயை அவர் திறக்கவில்லை, அடிக்கப்படும்படி கொண்டு போகப்படுகிற ஒரு ஆட்டுக்குட்டியைப் போலவும், தன்னை மயிர் கத்தரிக்கிறவனுக்கு முன்பாகச் சத்தமிடாதிருக்கிற ஆட்டைப் போலவும் அவர் தம்முடைய வாயைத் திறவாதிருந்தார். இடுக்கணிலும் நியாயத்தீர்ப்பிலுமிருந்து அவர் எடுக்கப்பட்டார். அவருடைய வம்சத்தை யாரால் சொல்லி முடியும்? ஜீவனுள்ளோருடைய தேசத்திலிருந்து அறுப்புண்டுபோனார். என் ஜனத்தின் மீறுதலினிமித்தம் அவர் வாதிக்கப்பட்டார்.” ஏசாயா 53:7-8).

## அவர் யார்?

இப்படி விவரிக்கப்பட்டவர் யார்? என்று அறிவதிலே எத்தியோப்பியன் ஆர்வம் காட்டினார். அந்த தீர்க்கதரிசியா அல்லது வேறு யாரோ ஒருவரா? தீர்க்கதரிசனம் இயேசுவைப் பற்றியது என பிலிப்புவால் விளக்கிக் கூற முடிந்தது. எருசலேமில் இருந்தபோது இந்தப் புது இயக்கம் பற்றியும், ரோமர்களால் கொலை செய்யப்பட்ட நசரேயனாகிய இயேசு உயிர்த்தெழுந்தார் என்ற கூற்றையும் எத்தியோப்பியன் கேள்விப்பட்டிருக்கலாம். அவன் நீதி விசாரணை பற்றிக் கேள்விப்பட்டிருந்தால், இயேசு தனக்காக, பொய்க்குற்றச்சாட்டுகளுக்கெதிராக வாதாடவில்லை என்பதும் தெரிந்திருக்கும்.

இப்பொழுது பிலிப்பு சுவிசேஷத்தைப் பிரசங்கத்தான். எத்தியோப்பியன் வாசித்த பகுதியிலிருந்தே துவங்கினான். ஏனென்றால் அந்த அதிகாரம் முழுவதுமே ஆண்டவராகிய இயேசுவின் பாடு மரணத்தைக் குறித்ததாயிருந்தது. ஏசாயா சுருளில் வேறு சில முக்கிய வசனங்களும் அவன் பயன்படுத்தத் தக்கவையாய் இருந்தன. எடுத்துக்காட்டாக.

கன்னியிடம் பிறந்தது. ஏசாயா 7:14


பரிபூரண (இலட்சிய) அரசன் ஏசாயா 11:1-10

யோவான் ஸ்நானகனின் ஊழியம் ஏசாயா 40:3

இன்னும் பல.

இவை நிறைவேறுவதற்கு 500 ஆண்டுகளுக்கு முன்பே இவையெல்லாம் எழுதப்பட்டன.





பிலிப்பு போதிக்க, போதிக்க, தேவனுடைய வார்த்தையிலுள்ள பண்டைய கால வாக்குத்தத்தங்களை ஆண்டவர் இயேசுவின் வாழ்க்கையும் ஊழியமும் எப்படி நிறைவேற்றின என எத்தியோப்பிய மந்திரி காண ஆரம்பித்தான். இந்த வாக்குத்தத்தங்களில் பெரும்பாலானவை அனைத்து யூதர்களுக்கும் புதிதாய் மதம் மாறியவர்களுக்கும் நன்கு தெரிந்தவையே.

## ஞானஸ்நானம் அவசியம்

அவர்கள் செல்லும் வழியிலே தண்ணீரைக் கண்டார்கள். (ஏசாயா 43:19 காண்க). எத்தியோப்பியன் “இதோ, தண்ணீர் இருக்கிறதே, நான் ஞானஸ்நானம் பெறுகிறதற்குத் தடையென்ன?” என்றான் (8:36).

ஞானஸ்நானத்தின் அவசியத்தைப் பற்றி பிலிப்பு விளக்கமாகக் கூறியிருந்திருப்பார். இப்பொழுது விசுவாசத்தின் முக்கியத்துவம் பற்றி அழுத்திக் கூறினான். மேசியா அல்லது கிறிஸ்து என்பவரை யூதர்கள் பல நூற்றாண்டுகளாக எதிர்பார்த்திருந்தனர். அந்த மேசியா அல்லது கிறிஸ்து இயேசுதான் என்றும், இன்னும் குறிப்பாகச்சொல்ல வேண்டுமானால் இயேசு தேவகுமாரன் என்றும் எத்தியோப்பியன் முழுவதுமாக நம்பி விசுவாசித்தான்.

தேவனுடைய நோக்கத்தைப்பற்றிய ஒரு உண்மையான விளங்கிக் கொள்ளுதல், ஞானஸ்நானத்திற்குத் தேவையான ஒன்று. குழந்தைகளுக்கும் சிறுவர்களுக்கும் அது கொடுக்க முடியாது. ஏனெனில் அதின் அர்த்தம் அவர்களுக்குத் தெரியாது. என்ன நடந்தது என்பது, முதன் முதலில் கிறிஸ்தவ ஞானஸ்நானம் என்னும் சடங்கு எவ்விதம் நிறைவேற்றப்பட்டது என்பதை விளக்குகிறது. சிலர் சொல்வது போல், தலையில் தண்ணீர் தெளித்தால் போதுமென்றால், எத்தியோப்பியன் தண்ணீர் இருக்கிறதே” என பரபரப்பாய்க் கூறியிருக்க வேண்டாமே. ஆதிக் கிறிஸ்தவர்கள் காலத்து ஞானஸ்நானத்தில் முழுவதுமாய் நீரில் மூழ்க வேண்டும்.

ஆகவே, அவன் ரதத்தை நிறுத்தும்படிக் கட்டளை இட்டான். அப்பொழுது



பிலிப்பும் மந்திரியும் ஆகிய இருவரும் தண்ணீரில் இறங்கினார்கள். பிலிப்பு அவனுக்கு ஞானஸ்நானம் கொடுத்தான். அவர்கள் தண்ணீரிலிருந்து கரையேறின பொழுது... (அப்போஸ்தலர் 8:38-39)

இது முதலாம் நூற்றாண்டில் நடந்த மற்ற ஞானஸ் நானத்தை ஒத்திருக்கிறது. யோவான் ஸ்நானகன் ஞானஸ்நானம் கொடுத்தான் என சொல்லப்பட்டிருக்கிறது.

"சர்லீம் ஊருக்குச் சமீபமான அயினோன் என்றும் இடத்திலே தண்ணீர் மிகுதியாயிருந்தபடியினால், யோவானும் அங்கே ஞானஸ்நானம் கொடுத்து வந்தான். ஜனங்கள் அவனிடத்தில் வந்து ஞானஸ்நானம் பெற்றார்கள்." யோவான் 3:23).

போதுமான தண்ணீர் என்று கூறப்பட்டிருப்பது மூழ்குதல் இருக்கவேண்டும் என்பதைக் குறிக்கிறது. பழைய வாழ்க்கைக்கு முற்றிலும் மரித்து, புதிய வாழ்க்கைக்கென உயிரோடெழும்புவதைக் காட்டும் ஒரு உவமையாக ஞானஸ்நானம் இருக்கிறது. ரோமர் 6ல் பவுல் அப்போஸ்தலன் ஒரு அடையாளமாக நீரில் அடக்கம் செய்யப்படுவதாக ஞானஸ்நானத்தைப் பற்றிக் கூறுகிறார்.

ஞானஸ்நானம் முடிந்ததும் பிலிப்பு எடுத்துக் கொள்ளப்பட்டான். மந்திரி அவனைக் காணவில்லை. ஆனால் தான் புதிதாய்க் கண்ட கிறிஸ்துவிலுள்ள விசுவாசத்தினால் மகிழ்ச்சியோடு செய்தியை தூரத்தில் தெற்கிலுள்ள எத்தியோப்பியாவுக்கு எடுத்துச் சென்றான். பிலிப்பு ஆசோத்திலே காணப்பட்டு, அவ்விடத்திலிருந்து வடக்கே யோப்பாவுக்குப் போகும் வரையில் பிரங்கித்து செசரியாவிலுள்ள தன் வீட்டாருக்கு வந்து சேர்ந்தான். (அப்போஸ்தல் 21:8).

**ஜான்ஹெல்லாவெல**



# இயேசு முரண்பாடுகள்

## "இயேசு" (எழுதியவர் கிரகரி கி.பி.38)

இயேசு பசியுள்ளவராய் ஊழியத்தை ஆரம்பித்தார்

இருப்பினும் அவரே ஜீவ அப்பம்

இயேசு பூமியிலே தன் ஊழியத்தைத் தாகமுள்ளவராய் முடித்தார்

இருப்பினும் அவரே ஜீவதண்ணீர்

இயேசு களைப்படைந்தார்

இருப்பினும் அவரே நம் இளைப்பாறுதல்

இயேசு வரி செலுத்தினார்

இருப்பினும் அவர் ராஜா

இயேசு பிசாசு பிடித்தவரெனக் குற்றஞ்சாட்டப்பட்டார்

இருப்பினும் அவர் பிசாசுகளைத் துரத்தினார்

இயேசு அழுதார்

இருப்பினும் அவர் நம் கண்ணீரைத் துடைக்கிறார்.

இயேசு முப்பது வெள்ளிக்காசுக்காக விற்கப்பட்டார்

இருப்பினும் அவர் உலகை மீட்டார்

இயேசு அடிக்கப்படுவதற்குக் கொண்டுப்போகப்படும் ஆட்டைப்போலக் கொண்டுபோகப்பட்டார்

இருப்பினும் அவரே நல்ல மேய்ப்பர்

இயேசு மரித்தார்

இருப்பினும் அவர் தம் மரணத்தால் மரணத்தின் வல்லமையை அழித்தார்.

# வினாவிடை

1. ஒரு சிண்ணம் பயிற்றங்கூழுக்காகத் தன் சேஷ்டபுத்ர பாகத்தை விற்றவன் யார் ?
2. நெகேமியாவின் பணி யாது ?
3. 'பிந்தின ஆதாம்' என்றழைக்கப்படுபவர் யார் ?
4. "இப்பொழுது கர்த்தாவே, நீர் எங்களுடைய பிதா, நாங்கள் களிமண், நாங்கள் அனைவரும் உமது கரத்தின் கிரியை", என ஜெபித்தது யார் ?
5. கர்த்தருடைய தூதன் யாரை பார்த்து, ''பராக்கிரமசாலியே, கர்த்தர் உன்னோடே இருக்கிறார்" என்றார் ?
6. எசேக்கியேலின் கண்ணுக்கு விருப்பமான எவளை கர்த்தர் எடுத்துக் கொள்ளப்போவதாக எசேக்கியேலிடம் கர்த்தர் சொன்ன நாளில் என்ன நடந்தது ?
7. 'உத்தமனும் சன்மார்க்கனும் தேவனுக்குப் பயப்படுகிறவனும்' என விவரிக்கப்பட்டவன் யார் ?
8. சூரியனைத் "தரித்து நிற்கும்படி" சொல்ல தேவனிடம் கேட்டது யார் ?
9. ஒரு பெரிய சிலையைக் கனவில் கண்டு அதற்கு தானியேலிடம் அர்த்தம் கேட்டுப் பெற்றுக் கொண்ட ராஜா யார் ?
10. ''கர்த்தாவே, எதுவரைக்கும் உம்மை நோக்கிக் கூப்பிடுவேன்.நீர் கேளாமலிருக்கிறீரே" என எப்புத்தகத்தில் தீர்க்கதரிசி ஜெபிக்கிறார் ?

**விடைகள் :**

ஏசா, பானபாத்திரக்காரனை (நெகே. 1:1), இயேசு (1கொரி 16:45-48), ஏசாயா (ஏசாயா 64:8), கிதியோன் (நியா 6:11,12) அவன் மனைவி இறந்துபோனாள் (எசேக். 24:16-18) யோபு (1:1), யோசுவா நேபுகாத் நேச்சார் (தானியேல் 2:1,31) ஆபகூக் (1:2)



# வாசித்துச் சிந்தித்தல்

**(பத்திரிக்கை 44ன் தொடர்ச்சி)**

ஆபிரகாம் காலத்திலிருந்து இயேசு வரையுள்ள சுருக்குமான யூத மக்கள் வரலாறும், இஸ்ரவேலர் தேவனிடம் செயல்பட்டதும் இங்கே கொடுக்கப்பட்ட ஸ்தேவானும் தேவனைப் பற்றிய உண்மையைக் கூறியதா ? யூத்தலைகளால் இயேசுவைப் போல கொல்லப்பட்டான்.

A brief history of the Jewish nation from the time of Abraham to Jesus. Israel's dealings with God are revealed in this passage. Stephen, like Jesus was killed by Jewish leaders because he spoke the truth about God. Acts 7:2-60

Act 7:2 அதற்கு அவன்: சகோதரரே, பிதாக்களே, கேளுங்கள்.
நம்முடைய பிதாவாகிய ஆபிரகாம் காரானூரிலே குடியிருக்கிறதற்கு
முன்னமே மெசொப்பொத்தாமியா நாட்டிலே இருக்கும்போது
மகிமையின் தேவன் அவனுக்குத் தரிசனமாகி: Act 7:3 நீ உன்
தேசத்தையும் உன் இனத்தையும் விட்டுப் புறப்பட்டு, நான் உனக்குக்
காண்பிக்கும் தேசத்துக்கு வா என்றார். Act 7:4 அப்பொழுது அவன்
கல்தேயர் தேசத்தைவிட்டுப் புறப்பட்டு, காரானூரிலே
வாசம்பண்ணினான். அவனுடைய தகப்பன் மரித்தபின்பு, அவ்விடத்தை
விட்டு நீங்கள் இப்பொழுது குடியிருக்கிற இத்தேசத்திற்கு அவனை
அழைத்துக்கொண்டுவந்து குடியிருக்கும்படி செய்தார். Act 7:5 இதிலே
ஒரு அடி நிலத்தையாகிலும் அவனுடைய கையாட்சிக்குக்
கொடாமலிருக்கையில், அவனுக்குப் பிள்ளையில்லாதிருக்கும்போது:
உனக்கும் உனக்குப் பின்வரும் உன் சந்ததிக்கும் இதைச் சுதந்தரமாகத்
தருவேன் என்று அவனுக்கு வாக்குத்தத்தம்பண்ணினார். Act 7:6
அந்தப்படி தேவன் அவனை நோக்கி: உன் சந்ததியார் அந்நிய
தேசத்தில் சஞ்சரிப்பார்கள்; அத்தேசத்தார் அவர்களை அடிமைகளாக்கி,
நானூறு வருஷம் துன்பப்படுத்துவார்கள். Act 7:7 அவர்களை
அடிமைப்படுத்தும் ஜனத்தையோ நான் ஆக்கினைக்குட்படுத்துவேன்.
அதற்குப்பின்பு அவர்கள் புறப்பட்டுவந்து இவ்விடத்திலே எனக்கு
ஆராதனை செய்வார்கள் என்றார். Act 7:8 மேலும் விருத்தசேதன
உடன்படிக்கையையும் அவனுக்கு ஏற்படுத்தினார். அந்தப்படியே
அவன் ஈசாக்கைப் பெற்றபோது, எட்டாம் நாளிலே அவனை
விருத்தசேதனம் பண்ணினான். ஈசாக்கு யாக்கோபையும், யாக்கோபு
பன்னிரண்டு கோத்திரப்பிதாக்களையும் பெற்றார்கள். Act 7:9 அந்தக்
கோத்திரப்பிதாக்கள் பொறாமைகொண்டு யோசேப்பை எகிப்துக்குக்
கொண்டுபோகும்படியாக விற்றுப்போட்டார்கள். Act 7:10 தேவனோ
அவனுடனேகூட இருந்து, எல்லா உபத்திரவங்களினின்றும் அவனை
விடுவித்து, எகிப்தின் ராஜாவாகிய பார்வோன் சமுகத்திலே அவனுக்குக்
கிருபையையும் ஞானத்தையும் அருளினார்; அந்த ராஜா அவனை
எகிப்துதேசத்திற்கும் தன் வீட்டனைத்திற்கும் அதிகாரியாக
ஏற்படுத்தினான். Act 7:11 பின்பு எகிப்து கானான் என்னும்
தேசங்களிலெங்கும் பஞ்சமும் மிகுந்த வருத்தமும் உண்டாகி,

நம்முடைய பிதாக்களுக்கு ஆகாரம் கிடையாமற்போயிற்று. Act 7:12 அப்பொழுது எகிப்திலே தானியம் உண்டென்று யாக்கோபு கேள்விப்பட்டு, நம்முடைய பிதாக்களை முதலாந்தரம் அனுப்பினான். Act 7:13 இரண்டாந்தரம் யோசேப்பு தன்னுடைய சகோதரருக்குத் தன்னைத் தெரியப்படுத்தினான். யோசேப்புடைய வம்சமும் பார்வோனுக்குத் தெரியவந்தது. Act 7:14 பின்பு யோசேப்பு, தன்னுடைய தகப்பன் யாக்கோபும் தன்னுடைய இனத்தார் யாவருமாகிய, எழுபத்தைந்துபேரை அழைக்க அனுப்பினான். Act 7:15 அந்தப்படி யாக்கோபு எகிப்துக்குப் போனான். அவனும் நம்முடைய பிதாக்களும் மரித்து, Act 7:16 அங்கேயிருந்து சீகேமுக்குக் கொண்டுவரப்பட்டு, ஆபிரகாம் சீகேமின் தகப்பனாகிய ஏமோருடைய சந்ததியாரிடத்தில் ரொக்கக்கிரயத்துக்கு வாங்கியிருந்த கல்லறையில் வைக்கப்பட்டார்கள். Act 7:17 ஆபிரகாமுக்குத் தேவன் ஆணையிட்டு அருளின வாக்குத்தத்தம் நிறைவேறுங்காலம் சமீபித்தபோது, Act 7:18 யோசேப்பை அறியாத வேறொரு ராஜா தோன்றின காலமளவும், ஜனங்கள் எகிப்திலே பலுகிப் பெருகினார்கள். Act 7:19 அவன் நம்முடைய ஜனங்களை வஞ்சனையாய் நடப்பித்து, நம்முடைய பிதாக்களின் குழந்தைகள் உயிரோடிராதபடிக்கு அவர்கள் அவைகளை வெளியே போட்டுவிடும்படி செய்து, அவர்களை உபத்திரவப்படுத்தினான். Act 7:20 அக்காலத்திலே மோசே பிறந்து, திவ்விய சவுந்தரியமுள்ளவனாயிருந்து, மூன்று மாதமளவும் தன் தகப்பன் வீட்டிலே வளர்க்கப்பட்டான். Act 7:21 அவன் வெளியே போட்டுவிடப்பட்டபோது, பார்வோனுடைய குமாரத்தி அவனை எடுத்துத் தனக்குப் பிள்ளையாக வளர்த்தாள். Act 7:22 மோசே எகிப்தியருடைய சகல சாஸ்திரங்களிலும் கற்பிக்கப்பட்டு, வாக்கிலும் செய்கையிலும் வல்லவனானான். Act 7:23 அவனுக்கு நாற்பது வயதானபோது, இஸ்ரவேல் புத்திரராகிய தன்னுடைய சகோதரரைக் கண்டு சந்திக்கும்படி அவனுடைய இருதயத்தில் எண்ணமுண்டாயிற்று. Act 7:24 அப்பொழுது அவர்களில் ஒருவன் அநியாயமாய் நடத்தப்படுகிறதை அவன் கண்டு, அவனுக்குத் துணைநின்று, எகிப்தியனை வெட்டி, துன்பப்பட்டவனுக்கு நியாயஞ்செய்தான். Act 7:25 தன்னுடைய கையினாலே தேவன் தங்களுக்கு இரட்சிப்பைத் தருவாரென்பதைத் தன்னுடைய சகோதரர் அறிந்து கொள்வார்களென்று அவன் நினைத்தான்; அவர்களோ அதை அறியவில்லை. Act 7:26 மறுநாளிலே சண்டைபண்ணிக் கொண்டிருக்கிற இரண்டுபேருக்கு அவன் எதிர்ப்பட்டு: மனுஷரே, நீங்கள் சகோதரராயிருக்கிறீர்கள்: ஒருவருக்கொருவர் அநியாயஞ்செய்கிறதென்ன என்று, அவர்களைச் சமாதானப்படுத்தும்படி பேசினான். Act 7:27 பிறனுக்கு அநியாயஞ்செய்தவன் அவனைப் பிடித்துத் தள்ளி: எங்கள்மேல் அதிகாரியாகவும் நியாயாதிபதியாகவும் உன்னை ஏற்படுத்தினவன் யார்? Act 7:28 நேற்று நீ அந்த எகிப்தியனைக் கொன்றதுபோல என்னையும் கொன்றுபோட மனதாயிருக்கிறாயோ என்றான். Act 7:29 இந்த வார்த்தையினிமித்தம் மோசே ஓடிப்போய், மீதியான் தேசத்திலே சஞ்சரித்துக்கொண்டிருந்தான்; அங்கே இருக்கும்போது அவனுக்கு இரண்டு குமாரர்கள் பிறந்தார்கள். Act 7:30 நாற்பது வருஷம் சென்றபின்பு, சீனாய்மலையின் வனாந்தரத்திலே கர்த்தருடைய



தூதனானவர் முட்செடி எரிகிற அக்கினிஜுவாலையிலே அவனுக்குத் தரிசனமானார். Act 7:31 மோசே அந்தத் தரிசனத்தைக் கண்டு, அதிசயப்பட்டு, அதை உற்றுப்பார்க்கும்படி சமீபித்துவருகையில்: Act 7:32 நான் ஆபிரகாமின் தேவனும் ஈசாக்கின் தேவனும் யாக்கோபின் தேவனுமாகிய உன் பிதாக்களுடைய தேவனாயிருக்கிறேன் என்று கர்த்தர் திருவுளம்பற்றின சத்தம் அவனுக்கு உண்டாயிற்று. அப்பொழுது மோசே நடுக்கமடைந்து, உற்றுப்பார்க்கத் துணியாமலிருந்தான். Act 7:33 பின்னும் கர்த்தர் அவனை நோக்கி: உன் பாதங்களிலிருக்கிற பாதரட்சைகளைக் கழற்றிப்போடு; நீ நிற்கிற இடம் பரிசுத்த பூமியாயிருக்கிறது. Act 7:34 எகிப்திலிருக்கிற என் ஜனத்தின் உபத்திரவத்தை நான் பார்க்கவே பார்த்து, அவர்கள் பெருமூச்சைக்கேட்டு, அவர்களை விடுவிக்கும்படி இறங்கினேன்; ஆகையால், நீ வா, நான் உன்னை எகிப்திற்கு அனுப்புவேன் என்றார். Act 7:35 உன்னை அதிகாரியாகவும் நியாயாதிபதியாகவும் ஏற்படுத்தினவன் யார் என்று சொல்லி அவர்கள் மறுதலித்திருந்த இந்த மோசேயைத்தானே தேவன், முட்செடியில் அவனுக்குத் தரிசனமான தூதனாலே, தலைவனாகவும் மீட்பனாகவும் அனுப்பினார். Act 7:36 இவனே அவர்களை அங்கேயிருந்து அழைத்துக்கொண்டுவந்து, எகிப்து தேசத்திலேயும் சிவந்த சமுத்திரத்திலேயும், நாற்பது வருஷகாலமாய் வனாந்தரத்திலேயும், அற்புதங்களையும் அடையாளங்களையும் செய்தான். Act 7:37 இஸ்ரவேல் புத்திரரை நோக்கி: உங்கள் தேவனாகிய கர்த்தர் உங்கள் சகோதரரிலிருந்து என்னைப்போல ஒரு தீர்க்கதரிசியை உங்களுக்காக எழும்பப்பண்ணுவார், அவருக்குச் செவிகொடுப்பீர்களாக என்று சொன்னவன் இந்த மோசேயே. Act 7:38 சீனாய்மலையில் தன்னுடனே பேசின தூதனோடும் நம்முடைய பிதாக்களோடுங்கூட வனாந்தரத்திலே சபைக்குள்ளிருந்தவனும், நமக்குக் கொடுக்கும்படி ஜீவவாக்கியங்களைப் பெற்றவனும் இவனே. Act 7:39 இவனுக்கு நம்முடைய பிதாக்கள் கீழ்ப்படிய மனதாயிராமல், இவனைத் தள்ளிவிட்டு, தங்கள் இருதயங்களில் எகிப்துக்குத் திரும்பி, Act 7:40 ஆரோனை நோக்கி: எகிப்து தேசத்திலிருந்து எங்களை அழைத்துக்கொண்டுவந்த அந்த மோசேக்கு என்ன சம்பவித்ததோ அறியோம்; ஆதலால் எங்களுக்கு முன்செல்லும் தெய்வங்களை எங்களுக்கு உண்டுபண்ணும் என்று சொல்லி; Act 7:41 அந்நாட்களில் ஒரு கன்றுக்குட்டியை உண்டுபண்ணி, அந்த விக்கிரகத்திற்குப் பலியிட்டு, தங்கள் கையின் கிரியைகளில் களிகூர்ந்தார்கள். Act 7:42 அப்பொழுது தேவன் அவர்களை விட்டு விலகி, வானசேனைக்கு ஆராதனை செய்ய அவர்களை ஒப்புக்கொடுத்தார். அதைக்குறித்து: இஸ்ரவேல் வம்சத்தாரே, நீங்கள் வனாந்தரத்திலிருந்த நாற்பது வருஷம்வரையில் காணிக்கைகளையும் பலிகளையும் எனக்குச் செலுத்தினீர்களோ என்றும், Act 7:43 பணிந்துகொள்ளும்படி நீங்கள் உண்டாக்கின சொரூபங்களாகிய மோளோகினுடைய கூடாரத்தையும், உங்கள் தேவனாகிய ரெம்பான் என்னும் நட்சத்திர சொரூபத்தையும் சுமந்தீர்களே; ஆகையால் உங்களைப் பாபிலோனுக்கு அப்புறத்திலே குடிபோகப்பண்ணுவேன் என்றும், தீர்க்கதரிசிகளின் புஸ்தகத்தில் எழுதியிருக்கிறதே. Act 7:44 மேலும் நீ பார்த்த மாதிரியின்படியே சாட்சியின் கூடாரத்தை உண்டுபண்ணுவாயாக என்று மோசேயுடனே

பேசினவர் கட்டளையிட்ட பிரகாரமாக, அந்தக் கூடாரம் வனாந்தரத்திலே நம்முடைய பிதாக்களோடு இருந்தது. Act 7:45 மேலும், யோசுவாவுடனேகூட நம்முடைய பிதாக்கள் அதைப் பெற்றுக்கொண்டு, தேவன் அவர்களுக்கு முன்பாகத் துரத்திவிட்ட புறஜாதிகளுடைய தேசத்தை அவர்கள் கட்டிக்கொள்ளுகையில், அதை அந்தத் தேசத்தில் கொண்டுவந்து, தாவீதின் நாள்வரைக்கும் வைத்திருந்தார்கள். Act 7:46 இவன் தேவனிடத்தில் தயவு பெற்றபடியினால், யாக்கோபின் தேவனுக்கு ஒரு வாசஸ்தலத்தைத் தான் கட்டவேண்டுமென்று விண்ணப்பம்பண்ணினான். Act 7:47 சாலொமோனோ அவருக்கு ஆலயத்தைக் கட்டினான். Act 7:48 ஆகிலும் உன்னதமானவர் கைகளினால் செய்யப்பட்ட ஆலயங்களில் வாசமாயிரார். Act 7:49 வானம் எனக்குச் சிங்காசனமும் பூமி எனக்குப் பாதபடியுமாயிருக்கிறது; எனக்காக நீங்கள் எப்படிப்பட்ட வீட்டைக் கட்டுவீர்கள்; நான் தங்கியிருக்கத்தக்க ஸ்தலம் எது; Act 7:50 இவைகள் எல்லாவற்றையும் என்னுடைய கரம் உண்டாக்கவில்லையா என்று கர்த்தர் உரைக்கிறார் என்று தீர்க்கதரிசி சொல்லியிருக்கிறானே. Act 7:51 வணங்காக் கழுத்துள்ளவர்களே, இருதயத்திலும் செவிகளிலும் விருத்தசேதனம் பெறாதவர்களே, உங்கள் பிதாக்களைப்போல நீங்களும் பரிசுத்த ஆவிக்கு எப்பொழுதும் எதிர்த்துநிற்கிறீர்கள். Act 7:52 தீர்க்கதரிசிகளில் யாரை உங்கள் பிதாக்கள் துன்பப்படுத்தாமலிருந்தார்கள்? நீதிபரருடைய வருகையை முன்னறிவித்தவர்களையும் அவர்கள் கொலைசெய்தார்கள். இப்பொழுது நீங்கள் அவருக்குத் துரோகிகளும் அவரைக் கொலைசெய்த பாதகருமாயிருக்கிறீர்கள். Act 7:53 தேவதூதரைக்கொண்டு நீங்கள் நியாயப்பிரமாணத்தைப் பெற்றிருந்தும், அதைக் கைக்கொள்ளாமற்போனீர்கள் என்றான். Act 7:54 இவைகளை அவர்கள் கேட்டபொழுது, மூர்க்கமடைந்து, அவனைப் பார்த்துப் பல்லைக் கடித்தார்கள். Act 7:55 அவன் பரிசுத்த ஆவியினாலே நிறைந்தவனாய், வானத்தை அண்ணாந்துபார்த்து, தேவனுடைய மகிமையையும், தேவனுடைய வலதுபாரிசத்தில் இயேசுவானவர் நிற்கிறதையும் கண்டு: Act 7:56 அதோ வானங்கள் திறந்திருக்கிறதையும், மனுஷகுமாரன் தேவனுடைய வலதுபாரிசத்தில் நிற்கிறதையும் காண்கிறேன் என்றான். Act 7:57 அப்பொழுது அவர்கள் உரத்த சத்தமாய்க் கூக்குரலிட்டுத் தங்கள் காதுகளை அடைத்துக்கொண்டு, ஒருமனப்பட்டு அவன்மேல் பாய்ந்து, Act 7:58 அவனை நகரத்துக்குப் புறம்பே தள்ளி, அவனைக் கல்லெறிந்தார்கள். சாட்சிக்காரர் தங்கள் வஸ்திரங்களைக் கழற்றி, சவுல் என்னப்பட்ட ஒரு வாலிபனுடைய பாதத்தினருகே வைத்தார்கள். Act 7:59 அப்பொழுது: கர்த்தராகிய இயேசுவே, என் ஆவியை ஏற்றுக்கொள்ளும் என்று ஸ்தேவான் தொழுதுகொள்ளுகையில், அவனைக் கல்லெறிந்தார்கள். Act 7:60 அவனோ, முழங்காற்படியிட்டு: ஆண்டவரே, இவர்கள்மேல் இந்தப் பாவத்தைச் சுமத்தாதிரும் என்று மிகுந்த சத்தமிட்டுச் சொன்னான். இப்படிச் சொல்லி, நித்திரையடைந்தான்.



கேள்வி 5:11 வசனங்கள் 30-32; 35, 38ஐ கவனமாக வாசித்து தூதன், தேவதூதன் மற்றும் தேவன் என்ற வார்த்தைகளைக் கவனமாகப் பாருங்கள். எரியும் முட்செடியிலிருந்து மோசேயிடம் பேசியது யார் என்று நினைக்கிறாய்? மேற்கண்ட வசனங்களின் மூலம் தேவதூதர்களின் வேலை என்னவாயிருக்கும் என்று நினைக்கிறாய்?

தேவனுடைய பிரதிநிதியாக அல்லது தூதராக ஒரு தேவதூதன் தான் மோசேயிடம் பேசினான். தம் மக்களோடு தொடர்பு கொள்ள இந்த முறையையே தேவன் தெரிந்து கொண்டுள்ளார். அவருடைய அதிகாரத்தை தூதன் கொண்டு சென்றான்.

தேவதூதர்கள் தேவனுடைய மரணமில்லாத தூதுவர்கள். எபிரேயருக்கு எழுதிய நிருபம் அவர்களை “ஊழியஞ் செய்யும்படிக்கு அவர்களெல்லாரும் அனுப்பப்படும் பணிவிடை ஆவிகளாயிருக்கிறார்களல்லவா?” (எபிரேயர் 1:14)

வேதத்தில் தேவதூதர்களைப் பற்றிய வேறு சில விவரங்கள்.

“கர்த்தருடைய வார்த்தையைக் கேட்டு, அவருடைய வசனத்தின்படி செய்கிற பலத்த சவுரியவான்களாகிய அவருடைய தூதர்களே, அவரை ஸ்தோத்தரியுங்கள்” சங்கீதம் (103:20)

“தேவதூதன் அவனுக்குப் பிரதியுத்தரமாக நான் தேவசந்நிதானத்தில் நிற்கிற காபிரியேல் என்பவன். உன்னுடனே பேசவும் உனக்கு இந்த நற்செய்தியை அறிவிக்கவும் அனுப்பப்பட்டு வந்தேன்.” லூக்கா 1:19.

“கர்த்தருடைய தூதன் அவருக்குப் பயந்தவர்களைச் சூழப் பாளய மிறங்கி அவர்களை விடுவிக்கிறார்” சங்கீதம் 34:7.

## மேற்கோள் 15, 16, 17 : இயேசு முழு உலகின் ராஜாவாக இருப்பார்

சங்கீதம் 89:35-37

சங்கீதம் 89:35 ஒருவிசை என் பரிசுத்தத்தின்பேரில் ஆணையிட்டேன், தாவீதுக்கு நான் பொய்சொல்லேன். Psa 89:36 அவன் சந்ததி என்றென்றைக்கும் இருக்கும்; அவன் சிங்காசனம் சூரியனைப்போல எனக்கு முன்பாக நிலைநிற்கும்.

சங்கீதம் 132:11

சங்கீதம் 132:11 உன் கர்ப்பத்தின் கனியை உன் சிங்காசனத்தின்மேல் வைப்பேன் என்றும்,

அப்போஸ்தலர் 2:29-32

அப்போஸ்தலர் 2:29 சகோதரரே, கோத்திரத்தலைவனாகிய தாவீதைக்குறித்து நான் உங்களுடனே தைரியமாய்ப் பேசுகிறதற்கு

இடங்கொடுங்கள்; அவன் மரணமடைந்து அடக்கம்பண்ணப்பட்டான்; அவனுடைய கல்லறை இந்நாள்வரைக்கும் நம்மிடத்திலிருக்கிறது. Act 2:30 அவன் தீர்க்கதரிசியாயிருந்து: உன் சிங்காசனத்தில் வீற்றிருக்க மாம்சத்தின்படி உன் சந்ததியிலே கிறிஸ்துவை எழும்பப்பண்ணுவேன் என்று தேவன் தனக்குச் சத்தியம்பண்ணினதை அறிந்தபடியால், Act 2:31 அவன் கிறிஸ்துவினுடைய ஆத்துமா பாதாளத்திலே விடப்படுவதில்லையென்றும், அவருடைய மாம்சம் அழிவைக் காண்பதில்லையென்றும் முன்னறிந்து, அவர் உயிர்த்தெழுதலைக்குறித்து இப்படிச் சொன்னான். Act 2:32 இந்த இயேசுவைத் தேவன் எழுப்பினார்; இதற்கு நாங்களெல்லாரும் சாட்சிகளாயிருக்கிறோம்.

**மத்தேயுவின் புத்தகத்தில் பதிவு செய்யப்பட்ட கிறிஸ்துவின் வம்ச வரலாறு**

கேள்வி **5:12** மோசேயின் வேலை என்ன? **(வசனம் 34-35)** இஸ்ரவேல் புத்திரர் அவனுக்கு எப்படி பதிலிறுத்தார்கள், நடந்து கொண்டார்கள்? **(வசனம் 38:41 பார்)**

ஆபிரகாம் உண்மையும் உத்தமமுமாய் இருந்ததினிமித்தம், அவன் சந்ததிகளுக்கு தேவன் வாக்குத்தத்தங்களைக் கொடுத்ததனாலேயே அவர்கள், இரட்சிக்கப்பட்டு விடுகிறார்களா? மேற்கண்ட வசனங்களில் ஒன்றைக் காட்டி உன் விடையை விளக்குக.

மோசே தேவனுக்கும் அவருடைய ஜனங்களுக்குமிடையே மத்தியஸ்தனயிருந்தான். மோசே தேவனோடு ஒரு விசேஷித்த உறவு கொண்டிருந்தான். தேவனைக் கிட்டிச் சேர விசேஷித்த அனுமதியும் அவனுக்குக் கொடுக்கப்பட்டது. அவருடைய மக்களை அடிமைத்தனத்திலிருந்து விடுவிப்பதற்கென அவர்களுக்கு நியாயப்பிரமாணத்தைக் கொடுத்தான். மோசேயின் மூலமாக தேவன் ஏற்படுத்தின உடன்படிக்கையின் விதிகளை இஸ்ரவேல் தேசத்தில் யாருமே நிறைவேற்றவில்லை. அம்மக்களில் உண்மையற்றவர்களாயும் பொல்லாதவர்களாமாயிருந்தனர்.

பிறப்புரிமையாக யாருமே இரட்சிக்கப்படுவதில்லை. ஒவ்வொருவரும் தங்கள் தவறுகளுக்காகத் தனித்தனியே கணக்குக் கொடுக்கவேண்டும். ஒரு தகப்பன் தன்னுடைய குற்றங்களுக்குக் கணக்குக் கொடுக்க வேண்டும். ஒரு மகன் தன்னுடைய குற்றங்களுக்குக் கணக்குக் கொடுக்க வேண்டும். மக்கள் விசுவாசித்தாலும் கிருபையாலும் இரட்சிக்கப்படுகிறார்கள். நற்கிரியைகள் விசுவாசத்திற்குச் சாட்சியாயிருக்கின்றன. எல்லாரும் பாவம் செய்திருப்பதால், தேவனுடைய இரக்கங்களினிமித்தம் கிருபை அளிக்கப்படுகிறது.

எசேக்கியேல் தீர்க்கதரிசி நாம் மேலும் புரிந்து கொள்ள உதவுகிறார். “மனுபுத்திரனே, நீ இஸ்ரவேல் வம்சத்தாரை நோக்கி : எங்கள் துரோகங்களும் எங்கள் பாவங்களும் எங்கள் மேல் இருக்கிறது. நாங்கள் சோர்ந்து போகிறோம். நாங்கள் பிழைப்பது எப்படியென்று நீங்கள் சொல்லுகிறீர்கள். கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறது என்னவென்றால் நான் துன்மார்க்கருடைய மரணத்தை விரும்பாமல், துன்மார்க்கன் தன் வழியை விட்டுத் திரும்பிப் பிழைப்பதையே விரும்புகிறேன் என்று என் ஜீவனைக் கொண்டு சொல்லுகிறேன். இஸ்ரவேல்



வம்சத்தாரே, உங்கள் பொல்லாத வழிகளை விட்டுத் திரும்புங்கள், திரும்புங்கள், நீங்கள் ஏன் சாகவேண்டும் என்கிறார் என்று அவர்களோடே சொல்லு. மனுபுத்திரனே, நீ உன் ஜனத்தின் புத்திரரை நோக்கி, நீதிமான் துரோகம் பண்ணுகிற நாளிலே அவனுடைய நீதி அவனைத் தப்புவிப்பதில்லை. துன்மார்க்கன் தன் துன்மார்க்கத்தை விட்டுத் திரும்புகிற நாளிலே அவன்தன் அக்கிரமத்தினாலே விழுந்து போவதுமில்லை. நீதிமான் பாவஞ்செய்கிற நாளிலே தன் நீதியினால் பிழைப்பதுமில்லை. பிழைக்கவே பிழைப்பாய் என்று நான் நீதிமானுக்குச் சொல்லும் போது, அவன் தன் நீதியை நம்பி, அநியாயஞ் செய்தால், அவனுடைய நீதியில் ஒன்றும் நினைக்கப்படுவதில்லை. அவன் செய்த தன் அநியாயத்திலே சாவான். பின்னும் சாகவே சாவாய் என்று நான் துன்மார்க்கனுக்கு சொல்லும்போது, அவன் தன் பாவத்தை விட்டுத் திரும்பி, நியாயமும் நீதியுஞ் செய்து, துன்மார்க்கன் தான் வாங்கிய அடமானத்தையும் தான் கொள்ளையிட்ட பொருளையும் திரும்பக் கொடுத்துவிட்டு, அநியாயம் செய்யாதபடி ஜீவப்பிரமாணங்களில் நடந்தால், அவன் சாகாமல் பிழைக்கவே பிழைப்பான். அவன் செய்த அவனுடைய எல்லாப் பாவங்களும் அவனுக்கு விரோதமாக நினைக்கப்படுவதில்லை. அவன் நியாயமும் நீதியும் செய்தான், பிழைக்கவே பிழைப்பான் என்று சொல்லு” எசேக்கியேல் **33:10-16.**

# மேற்கோள் 19 : இஸ்ரவேல் இப்போதும், கிறிஸ்துவிலுள்ள தேவனுடைய திட்டத்தில் ஒரு பகுதிதான்

தேவன் இன்னும் இஸ்ரவேலுக்குத் தயையுள்ளவரயிருந்து உத்தமத்திற்குப் பலனளிக்கிறார் என்று பவுல் அப்போஸ்தலன் விளக்குகிறார். ரோமர் **11:1-6**

ரோமர் 11:1 இப்படியிருக்க, தேவன் தம்முடைய ஜனங்களைத் தள்ளிவிட்டாரோ என்று கேட்கிறேன், தள்ளிவிடவில்லையே; நானும் ஆபிரகாமின் சந்ததியிலும் பென்யமீன் கோத்திரத்திலும் பிறந்த இஸ்ரவேலன். Rom 11:2 தேவன் தாம் முன்னறிந்துகொண்ட தம்முடைய ஜனங்களைத் தள்ளிவிடவில்லை. எலியாவைக்குறித்துச் சொல்லிய இடத்தில், வேதம் சொல்லுகிறதை அறியீர்களா? அவன் தேவனை நோக்கி: Rom 11:3 கர்த்தாவே, உம்முடைய தீர்க்கதரிசிகளை அவர்கள் கொலைசெய்து, உம்முடைய பலிபீடங்களை இடித்துப்போட்டார்கள்; நான் ஒருவன்மாத்திரம் மீதியாயிருக்கிறேன், என் பிராணனையும் வாங்கத்தேடுகிறார்களே என்று இஸ்ரவேலருக்கு விரோதமாய் விண்ணப்பம்பண்ணினபோது, Rom 11:4 அவனுக்கு உண்டான தேவஉத்தரவு என்ன? பாகாலுக்குமுன்பாக முழங்காற்படியிடாத ஏழாயிரம்பேரை எனக்காக மீதியாக வைத்தேன் என்பதே. Rom 11:5 அப்படிப்போல இக்காலத்திலேயும் கிருபையினாலே உண்டாகும் தெரிந்துகொள்ளுதலின்படி ஒரு பங்கு மீதியாயிருக்கிறது. Rom 11:6 அது கிருபையினாலே உண்டாயிருந்தால் கிரியைகளினாலே உண்டாயிராது; அப்படியல்லவென்றால், கிருபையானது கிருபையல்லவே. அன்றியும் அது கிரியைகளினாலே உண்டாயிருந்தால் அது கிருபையாயிராது; அப்படியல்லவென்றால், கிரியையானது கிரியையல்லவே.